உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

அற்றோனித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

10ஏ, நெலும் மாவத்தை, சிறிசரணங்கர வீதி, களுபோவில, தெஹிவளை எனும் முகவரியில் வதியும் அகமட் லெப்பை முகம்மது சுபைர் (தேசிய அடையாள அட்டை இல. 453472370V) ஆகிய நான், மேற்படி முகவரியில் வதியும் முகமட் றஸீட் நூறுல் ஹிதாயா (தேசிய அடையாள அட்டை இல. 517912204V) என்பவருக்கு கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு முகமட் நிஸாம் காரியப்பர் அவர்களால் 10/23-07-1993 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தி என்னால் வழங்கப்பட்ட அற்றோனித் தத்துவத்தை 20.08.2002 ஆந் திகதியின் பின்னர் செயற்படத்தக்கதாக இத்தால் இரத்துச் செய்து விட்டேன் என்றும், இது குறித்த காணியிலிருந்து தத்துவக்காரரினால் என் சார்பில் செய்யப்படும் எந்தச் செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேனென்றும், அத்தகைய செயல்கள் அனைத்தையும், நான் ஏற்றங்கீகரிக்க மாட்டேனென்றும், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

அகமட்லெப்பை முகம்மது சுபைர்.

6-511

ஏல விற்பனைகள்

ஊவா அபிவிருத்தி வங்கி

கடன் இலக்கம்: UDB/MON/BB/04/TB/01/2000

1997 ஆம் ஆண்டு இலக்கம் 6ஐக் கொண்ட பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 43(ஆ) பிரிவு மற்றும் 1990 ஆம் ஆண்டு இலக்கம் 4 ஐக் கொண்ட வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிட்டுக் கொள்ளும் விசேட ஆணைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் 2003.07.07 ஆந் திகதிநடத்தப்பட் கூட்டத்திபோது, ஊவா அபிவிருத்தி வங்கியின் பணிப்பளார் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பேரில், இங்கு கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஆதனத்தை 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

அட்டவணை

ஊவா மாகாண மொனராகலை மாவட்டம், புத்தளை கோரளை கதிர்காம செயலாளர் பிரிவில் கதிர்காம கிராம தெடகமுவே சேனை எனப்படும் காணியிலிருந்து பிரித்து வேறாக்கப்பட்ட இரண்டு (2 றூ) றூட் பரப்பைக் கொண்ட காணிக்காக 1998.12.20 ஆந் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. ஜி. டி. எல். கருணாரத்ன அவர்களால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட வரைபடம் இலக்கம் 3374 ஐக் கொண்ட துண்டு இல. 01 இன் காணி எல்லைகள்- வடக்கே: ஸாம், ஜயசிங்ஹ ஆகியோர்களின் காணியும்; கிழக்கே: பாதுகாப்பு வீதியும் வள்ளிமான கிராமம் முதல் கதிர்காமம் வரைப் போகும் வழியும்; தெற்கே: இக் காணியின் மிகுதி காணி; மேற்கே: நெக ரெஸ்ட் எனப்படும் விடுதியும் இந் நான்கு சுற்றிலும் அமைந்துள்ள காணி உட்பட அனைத்துமாகும். முன்பதிவு: எல். டி. சி. எம். 53/271 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

ஆதனத்தை அடைதல்.- கதிர்காம நகரத்திலிருந்து சிதுல் பவ்வ பாதையில் 900 மீட்டர் தூரம் சென்று இடது புறமாகவுள்ள வள்ளிமான பாதையில் 350 மீட்டர் தூரம் சென்றதும் வலது புறமாக பாதையின் அருகில் இவ்வாதனம் அமைந்துள்ளது. (அரச மரத்திற்கு முன்னர்)

மேலதிக விபரங்களுக்கு.- 2004.02.13 ஆந் திகதி அரசாங்க வர்த்தமானியிலும் 2004.05.10 ஆந் திகதி "தினமின", "டெய்லி நியூஸ்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏலவிற்பனைப் பிரேரணை அறிவித்தலுக்குக் கவனம் செலுத்தவும்.

கொடுப்பனவு செய்யும் விதம்.- வெற்றி பெற்ற கொள்வனவாளர் கீழ்க்காணுமாறு பணம் செலுத்துதல் வேண்டும் :-

1. கொள்வனவு விலையில் 10% ;
2. உள்ளூராட்சி அதிகார சபையின் வரிக்காக அதிகார சபைக்கு 01% ;
3. ஏலதாரரின் தரகுப் பணமாக விற்பனை விலையில் 02.5% ;
4. இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கொடுப்பனவாக ரூபா 500;
5. விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணமும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணமும் ;
6. கொள்வனவு விலையில் மிகுதி 90% ஆன பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஊவா அபிவிருத்தி வங்கியின் பதுளை பிரதான அலுவலகத்தில் பொது முகாமையாளர் அவர்களிடம் செலுத்துதல் வேண்டும்.

உரிமை, உறுதிப்பத்திரம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்கள் இல. 26, வங்கி வீதி பதுளை என்ற இடத்தில் அமைந்துள்ள பதுளை பிரதான தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 055 -2222849

மேலே குறிப்பிட்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% ஆன பணம் திருப்பி செலுத்தாமலிருக்கவும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

இல. 48/1, கலுகல்பிடிய,
பதுளை,
தொலைபேசி இல. 055-2230846

டப். ஜயதிலக,
பகிரங்க ஏலதாரர், சமாதான, நீதவான்,
மதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

6-530